முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அமர்நீதி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

09.11.2018, வெள்ளிக்கிழமை

1. **அருட்குருவாய் விளங்கும் அரங்கா**
**ஆற்றலாய் அவதாரம் புரிந்து**
**ஆறுமுகன் சக்தியாக வந்த**
**அரங்கனே ஞான வள்ளலே வாழ்க**
2. வாழ்கயென பெருமை கூறி
வல்லமைமிக்க ஞானிகளை தொடர்ந்து
ஊழ் வென்ற நாயன்மார்களும்
ஓங்கார உலகம் அமைய வேண்டி
3. வேண்டியே ஒளி சூட்சும நூலை
**விளம்பி துலை திங்களில்**
**உண்டான மூவேழீர் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 23ம் நாள் 09.11.2018, வெள்ளிக்கிழமை)**
**உரைத்திடுவேன் அமர்நீதி நாயன்மார் யானும்**
4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஞான உலகம் அமைக்க
ஞானதேசிகன் தருமம் பெருக்கி
நல்சேவை ஆற்றி வருக
5. வருகவே தருமம் மெச்சி
வல்லமை கூட்டிட அருள வந்தேன்
முருகப்பெருமான் தயவு அடைய
முழுமை ஞானமாம் அரங்க ஞானி
6. அரங்க ஞானி வழியே சிறந்த வழி
அனைவரும் நம்பி வருக சடுதி
வரங்கள் கூடி உலகினில்
வடிவேலனாரின் சூட்சுமம் விளங்கி
7. விளங்கி கலியிடர்களெல்லாம்
விரைந்து ஓட நேருமென்பேன்
களங்கமற எல்லா மக்களும்
கட்டாயம் சைவநெறி ஏற்று
8. ஏற்றுமே ஞானிகள் வழியில்
எல்லா மக்களும் தொடர
ஆற்றல்பட ஞான பலமும்
அணுகிடும் குருவருள் பலமும்
9. பலமான இயற்கை வளமும்
பாதுகாப்பான சமூகச் சூழலும்
வளம்பெற உருவாகி கலியுகம்
வடிவேலனின் ஞானயுகமாகும்

10. ஆகவே அதிகாரிகள் ஆள்பவர்கள் என
அனைவரும் சன்மார்க்க நெறி
வகைபட ஏற்று உடன் வர
வல்லமை கூடும் தமிழகத்தில்

11. தமிழகத்தில் பாதுகாப்பு கூடும்
தன்னார்வ தொண்டுகள் பெருகி
தமிழகம் தொட்டு பெருமாற்றம் காணும்
தாமுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் அமர்நீதிநாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா ஞானம் கொண்டு உலக மக்களின் அறியாமை எனும் இருளைப் போக்கி ஞான ஒளிதனை அருளி வழி நடத்திடும் அருட்குருவே அரங்கமகா தேசிகனே, அற்புதமாய் ஆற்றல் மிகக் கொண்டுமே ஞானபண்டிதனாரின் அவதாரமாக இவ்வுலகினில் வந்துதித்திட்ட ஆறுமுக சக்தியே அவதார ஞானியே அரங்கமகாதேசிகனே ஞானவள்ளலே வாழ்க வாழ்க, அரங்கா உம்மை வாழ்க வாழ்க என வாழ்த்தியே உமது பெருமையை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 23ம் நாள் 09.11.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ஞானிகளைத் தொடர்ந்து ஊழ்வினைகளை வென்று வெற்றி கண்ட நாயன்மார்கள் நாங்களும் இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஆட்சி அமைய வேண்டி தொடர்ந்து உரைக்கின்றோம். அதன் வகையில் அமர்நீதிநாயனார் யானும் ஒளி சூட்சும நூல்தனையே உரைக்கின்றேன் என்கிறார் மகான் அமர்நீதிநாயனார்.

இவ்வுலகின் துன்பங்களைப் போக்கி உயர் ஞான உலகம்தனை அமைத்திட வேண்டியே உலகம் முழுதும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தருமத்தினை பெருக்கும் வகையில் அற்புதமான தர்மப்பணிகளை, தொண்டுகளை செய்து வருகின்றார். அரங்கன் செய்யும் தர்மத்தினை கண்டு நெகிழ்ந்து மெச்சியே அரங்கன் வல்லமை பெருகிட அருள வந்தேன் அமர்நீதிநாயனார் யானும்.

முருகப்பெருமானிடத்து தயவினை பெற்றிட வேண்டுமென்றால் அதற்கு மிகச் சிறந்த வழி ஆறுமுக அரங்கன் கூறும் வழியே தருமத்தின் வழியே அற்புதமான வழியாகும். உலக மக்களே அரங்கனை நம்பி உடன் விரைந்து வாரீர் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.

உலக மக்கள் அரங்கனை நம்பிக்கையோடு பணிந்து ஏற்றுக் கொண்டு அரங்கன் கூறும் மார்க்கத்தினை கடைப்பிடித்து வந்திட்டால் அவர்களுக்கு வரங்கள் பெருகி உலகினில் முருகப்பெருமானின் சூட்சுமங்கள் எல்லாம் விளங்கி கலியுக துன்பமெல்லாம் விரைந்து விலகிடும்.

உலக மக்களெல்லாம் அவசியம் அரங்கன் கூறும் கொல்லாமை நெறியான சைவநெறியினை ஏற்று உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவஉணவை மேற்கொள்ள வேண்டும். ஞானிகள் கூறும் தர்மத்தின் வழியில் எல்லா மக்களும் தொடர்ந்து வர வேண்டும்.

அவ்விதமே தொடர்ந்து வர, அவர்களுக்கு ஞானபலம் பெருகி ஆற்றல் கூடிடும். அத்துடன் குருவருள் பலமும் பெருகிடும், அவர்கள் வசிக்கும் நாட்டினில் இயற்கை வளமும் பெருகும், பாதுகாப்பான சூழல், பாதுகாப்பான சமூக சூழல் உருவாகி இந்த கலியுகமே மாறி முருகப்பெருமானின் ஞானஉலகமாக ஆகிடும்.

ஆதலினால் நாட்டை வழிநடத்தும் அதிகாரிகளும் நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களும் சன்மார்க்க நெறியினை உள்ளன்போடு முறையோடு ஏற்று கடைப்பிடித்திட தமிழகத்தின் வல்லமைகள் அதிகமாகும், அருள் பாதுகாப்பு பெருகிடும், தன்னார்வ தொண்டுகளும் பெருகி தமிழகத்திலிருந்து உலகப் பெருமாற்றம் துவங்கி உலகமெங்கும் பரவி இந்த உலகமே ஞானஉலகமாக ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் அமர்நீதிநாயனார்.

–சுபம்–